செ.வெ.எண்: 819 30.9.08

## உணவுத் திருவிழா

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

### செய்திக் குறிப்பு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 34 ஆண்டுகளாகத் தீவுத்திடலில் இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. கடந்த ஒரு ஆண்டாக இன்னபிற பொருட்காட்சிகளையும் நடத்தி, வேலைவாய்ப்பைப் பெருக்கியதோடு, உள்ளூர் சுற்றுலாவையும் அதிகப்படுத்தி வருகிறது. சமீபகாலங்களில் தீவுத்திடலில் பல தனியார் நிறுவனங்கள் முன்வந்து, பல பொருட்காட்சிகளையும் நிகழ்வுகளையும் நடத்தி, இந்தத் திடல் அமைந்துள்ள சூழலை முழுமையாக பயன்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்கி தந்திருக்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முதல்முறையாக Digital Entertainment Agency என்ற நிறுவனத்தின் மூலம், உணவு மற்றும் விளையாட்டுத் திருவிழாவை அக்டோபர் 1 முதல் 12 வரை நடத்த இருக்கிறது. இந்தப் பொருட்காட்சி தொடங்க இருக்கின்ற முதலாம் நாளான அக்டோபர் 1ம் தேதி கட்டணம் ஏதுமின்றி இலவசமாக பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தக் கண்காட்சி மதியம் 3 மணியில் இருந்து இரவு 10 மணி வரை இயங்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய சிறுவர் ரயில் குழந்தைகளை குதூகலப்படுத்தும். வாகனங்களை நிறுத்துவதற்கு போதிய வசதிகள் உள்ளதால், பல்வேறு தரப்பு மக்கள் இந்த பொருட்காட்சிக்கு வந்து, நிம்மதியாகத் தங்கள் மாலைப் பொழுதைக் கழிக்கலாம்.

தமிழகத்தில் உணவுச் சுற்றுலாவை மேம்படுத்தும்பொருட்டு இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. பெரும்பான்மையான கல்வி நிறுவனங்களுக்கு நவராத்திரி விடுமுறை இருப்பதால், இந்த பொருட்காட்சிக்கு பொதுமக்கள் திரளாக வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பொருட்காட்சியில் பல்வேறு உணவு வகைகள் சுவைப்பதற்கு கிடைக்கும். சைவ, அசைவ உணவுகள்

தனித்தனியான அரங்கங்களில் கிடைக்கும். பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், ஆந்திரப்பிரதேசம் முதலிய மாநிலங்களின் உணவுவகைகளும் இங்கே கிடைக்கும். கிராம உணவு மணமணத்துடன் அமையவிருக்கின்ற தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய அரங்கத்தில் கிடைக்கும்.

பெரியவர்களுக்கு நுழைவுக் கட்டணம் ரூ.10.00, சிறுவர்களுக்கு ரூ.5.00, குழந்தைகளுக்குக் கட்டணம் கிடையாது. இந்த நிகழ்வை வண்ணமயமாக்கும்பொருட்டும், மகிழ்ச்சிகரமானதாக ஆக்கும்பொருட்டும் விளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள் போன்ற மனத்தை மயக்கும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. பார்வையாளர்கள் 6 முதல் 7 மணி நேரம் செலவிட்டு, இந்தக் கண்காட்சியில் தங்கள் மாலைப்பொழுதை தேன்தடவிய மாலைப்பொழுதாக மாற்றிக்கொள்ளலாம்.

இந்திய ஓட்டல் மேலாண்மை நிறுவனம் மற்றும் இதர உணவுக்கல்வி நிறுவனங்கள் இதில் கலந்துகொண்டு, பல்வேறு உணவுவகைகளை தயாரிப்பது எப்படி என்று செயல்விளக்கம் தர இருக்கின்றனர். பார்வையாளர்கள் தங்களுக்கு விருப்பமான உணவை எப்படி தயாரிக்கவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளலாம்.

இந்த உணவுத் திருவிழா உலகச்சுற்றுலா நாளைக் கொண்டாடுவதை-யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட உள்ளது. சென்னையில் இருப்பவர்களும், சுற்றியிருக்கின்ற மாவட்டங்களில் இருப்பவர்களும் தாங்கள் இதுவரை ருசித்திராத உணவை, ஒரே இடத்தில் குறைந்த விலையில் ருசித்து, ரசித்து, மகிழ்ந்து தங்கள் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம்.

*******

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9